# விடியல்

## The Dawn

**மாத இதழ், பொழுது – 65**
**செப்டம்பர், 2014**
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்



**சிறப்பாசிரியர்**
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

**இணை ஆசிரியர்**
**முனைவர் ம.லோகேஸ்வரன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்

**ஆசிரியர் குழு**
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்



**வெளியீடு:**

**தமிழ்த்துறை**

**கே.எஸ். ரங்கசாமி**
**கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
திருச்செங்கோடு – 637 215,
தமிழ்நாடு, இந்தியா.
fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu



©K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.*


## தலையங்கம்

உலகத்தில் மிக உன்னதமான உறவு ஒன்று உண்டென்றால் அது ஆசிரியர் மாணவர் உறவு என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் அந்த உறவு பெரும்பாலும் வலுப்பெறாமல் திணறிக்கொண்டு வருவது தான் இன்றைய பெரும் அவலம். ஏன் இந்த அவலம்? யார் காரணம்? எங்கே தவறு நடக்கிறது? என்று கேட்டால் ஆத்மார்த்தமாக ஒப்புக்கொள்ள வேண்டியவர்கள் ஆசிரியர்கள் தான். ஆம்! மாணவர்கள் எக்காலத்திலும் மாணவர்களாகவே இருந்துள்ளார்கள். ஆசிரியர்கள் தான் மன, உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு தமக்குரிய தார்மீகப் பொறுப்பை அவ்வப்போது மறந்து விடுகின்றனர்.

அன்பின் திருவுருவாக ஆசிரியர்கள் மாற வேண்டும். மாணவரின் உள்ளம், உடல் சார்ந்த பிரச்சனையை அடிக்கடி கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். நல்ல வழியில் சென்று கொண்டிருக்கிறோம் என்று அவர்களை அவர்களே நம்ப வேண்டும். வெறும் பாடத்தை நடத்துவதற்கு ஆசிரியர் என்கிற பதவி தேவையில்லை. பெற்றோருடன், நல்ல நண்பனுடன் மாணவர் பழகுவதைப் போன்ற எண்ணம் தோன்ற வேண்டும். இடைவெளி போதுமானதாக இருந்தால் போதும். அதற்கு ஆசிரியர்கள் மெனக்கெடுத்தால் கற்றல்-கற்பித்தல் எனும் கல்விமுறை ஒழுங்கு பெறும்.

# உள்ளுறை


**கவிதை**

ஆசிரியர்……………………………… 03

அம்மா………………………………… 03

வெற்றி நிச்சயம்…………………… 03

சாதீ………………………………… 03

தாய்மை……………………………… 04

தாயின் அன்பு……………………… 05

அன்பு………………………………… 10

தன்னம்பிக்கை……………………… 10

மழை………………………………… 11

கவியே உம்மை ஆராதிக்கிறேன்... 14

பேராசை……………………………… 13

கண்டுபிடியுங்கள் கடவுளை…….. 14

மழைநீர் சேகரிப்பு……………… 15

குழந்தைகள்……………………….. 15

தாய்……………………………….. 15

வறுமைமையின் துயரங்கள்……. 16

நான் அப்படித்தான்……………….. 16

தன்னம்பிக்கை…………………. 17

நட்பு……………………………… 17

மழைநீர்………………………….. 18

வைரஸ்…………………………. 24

செவ்வாய் கிரகம்………………. 24

பூ பறிக்க வருகிறோம்…………. 25

அன்பு…………………………….. 25

தன்னம்பிக்கை………………….. 26

கற்பு……………………………….29

ஆர்மோனியமும்நெளிந்த

தட்டுகளும்…………………………29

தலைமுறை…………………………30

டீக்கடை குமாரு………………….30

பைலட்………………………………..31

பிச்சைக்காரப் பெண்…………….31

**சிறுகதை**

செத்தான் சிதம்பரம்……………. 18

**கட்டுரை**

மருதுபாண்டியர்…………………..6

திருமூலரின் அறிவியல்…………11

தன்னம்பிக்கை………………….. 26

**எழுத்தாணி - 4**

பெத்த மனசு………………… 7

**குறிப்புகள்**

அட அப்படியா……………………13

சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்…..32

## ஆசிரியர்

*அம்மாவின் கை*
*அன்பைக் காட்டும்*
*அப்பாவின் கை*
*அறிவைக் காட்டும்*
*ஆசிரியரின் கை*
*வாழ்க்கையைக் காட்டும்*

**ஏ.தரணி**
**வணிகவியல்-இளங்கலை முதலாமாண்டு**

## அம்மா

*சிற்பியும் நீயே*
*சிற்பமும் நீயே*
*என்னைச் சிதைக்காமல்*
*செதுக்கியவளும் நீயே*
*வலியை வாங்கி*
*எனக்கு வாழ்க்கையைக்*
*கொடுத்த தெய்வமும் நீயே..!*

**ஏ.தரணி**
**வணிகவியல்-இளங்கலை முதலாமாண்டு**

## வெற்றி நிச்சயம்

*ஒரே குறிக்கோள்*
*அளவற்ற ஊக்கம்*
*சோர்வற்ற முயற்சி*
*தளர்வற்ற நெஞ்சுறுதி*
*சளைக்காத உழைப்பு*
*சாதிக்கக் கற்றுக்கொள்*
*வெற்றி நிச்சயம்..*

**ஏ.தரணி**
**வணிகவியல்-இளங்கலை முதலாமாண்டு**

## சாதீ..!

*இப்போதெல்லாம்*
*கிராமங்களிலல்ல..*
*நாகரிகம் வளர்ந்த*
*நகரங்களில் தான்*
*பரவிக்கொண்டிருக்கிறது*
*இத்தீ..*
*நாமும் வளர்ந்துவிட்டோம்*
*நாகரிகக் கோமாளிகளாக!*
*இரட்டைக் குவளைமுறை*
*ஆலய நுழைவுப் போராட்டம்*
*தோள்சீலைப் போராட்டம்*
*அனைத்தும்*
*முடிவுக்கு வந்துவிட்டது*
*ஆனால் சாதி..?*
*சாதியைத் தெரிந்து கொண்டு*
*காதலைக் கூறும் போது*
*கேள்விக்கு உள்ளாக்கப்படுவது*
*உண்மையான அன்பு தான்..*
*தேசத் தலைவர்களெல்லாம்*
*சாதித்தலைவர்களாக*
*அடையாளப்படுத்தப்படும் போது*
*புரிகிறது நமக்கு*
*நம் தேசம்*
*நாசமாய்ப் போய்விட்டதென்பது..*
*ஒன்றுமட்டும் புரிகிறது*
*உண்மையை அறிவதற்கல்ல*
*ஒதுக்கி வைத்துப்*
*பார்ப்பதற்குத் தான்*
*பயன்படுத்தப்பட்டிருக்கிறது*
*நமது ஆறாம் அறிவு..!*

*இன்றும் ஏதோவொரு*
*அடையாளப்படுத்தத்தின்*
*வெளிப்பாடுகளாகத்தான்*
*மேலத்தெரு*
*கீழத்தெரு*
*வடக்குத் தெரு*
*தெற்குத் தெரு*
*என்பனவெல்லாம்..*
*கடவுள் மனிதனைப்*
*படைத்தானாம்..*
*'தலையி'லும் தோளிலும்*
*இடையிலும் காலிலும்*
*இத்தனை உறுப்புகளில் படைத்தவன்*
*மறந்தே போனான்*
*மனிதனாகப் படைப்பதற்கு..!*
*முற்போக்கானவன்*
*முட்டாளாக்கப்படுகிறான்*
*மூடநம்பிக்கை எதிர்த்தவன்*
*மூடனாக்கப்படுகிறான்*
*ஏமாற்றுபவன் மட்டும்*
*ஏற்றப்படுகிறான்*
*சமுதாயக் கோபுர உச்சியில்..*
*எத்தனை குடிசைகளை*
*எரித்தாலும்*
*எத்தனை இளசுகளை*
*அழித்தாலும்*
*எத்தனை தலைவர்களைக்*
*காவு வாங்கினாலும்*
*அடங்கப்போவதில்லை*
*இத்தீயின் பசி..!*
*சுயசிந்தனையற்றவர்கள்*
*இவ்வுலகைச் சுற்றி வரும் வரை*
*பரவிக் கொண்டுதானிருக்கும்*
*இத்தீ*
*காட்டுத்தீயாக..!*

***மா.ப.சி.***
***தமிழ்த்துறை***

## தாய்மை

*என் உயிரின் முழுத்தோற்றம்*
*என்முன்*
*உன் உருவத்தில் தான்*
*நடமாடும்..*
*ஒருநாளில் என் ஜீவனில்*
*கலந்தவள் நீ..*
*பல நாட்களில் வேதனையில்..*
*கருவறையில்*
*கலந்தது முதல் இன்று வரை*
*கண்ணே!*
*நீ என் ரத்தத்தில் கலந்தவள்!*
*துறுதுறு பார்வையில்*
*உன் கவனம்*
*மாறினாலும்*
*ஆயிரம் தேவைகள் நடுவே*
*உன் குரல்*
*அம்மா எனும் போது..!*
*நீ இருந்த கருவறை கூட*
*ஒருமுறை சிலிர்த்து அடங்கும்!*
*உன் மகிழ்ச்சியில் என்னையும்*
*இணைத்துக் கொண்டாயே*
*அப்போது நீ என் மடியில்*
*புரண்டதும்*
*புன்னகைத்ததும்*

அடடா
மறுபிறவியும்
நான் தாயாக மாற வரம் வேண்டும்..!

**மு.சிந்துஜா**

**இளங்கலை வேதியியல் முதலாமாண்டு**

## தாயின் அன்பு

என்னைப் பெண் என்ற போதும்
உன் தந்தை
என்னைத் துணை என்ற போதும்
துடிக்காத உள்ளம்
நீ என்னை அம்மா
என்றழைத்தபோது
துடித்தது..
நீ அருகிலிருக்கும் போது
பைரவி ராகம் செவித்த
என் செவிகள்
நீ
என்னைவிட்டு விலகிய பின்
சோக கீதத்தையும் கேட்டதே..!
அதை நீ உணர வேண்டும் மகளே..
பிறப்பு எப்படி என்பதை
நான் பிறக்கும் போது
உணரவில்லை..
செல்ல மகளே!
நீ பிறந்தபோது தான்
பிறப்பின் அருமை
தெரிந்து கொண்டேன்..
நீ என்னை நினைக்கமாட்டாய்
ஆனால் நான் உன்னைத் தவிர
வேறு எதையும் நினைக்க
முடியவில்லை..
நினைவைக் கொடுத்த ஆண்டவன்
நிம்மதியைக் கொடுக்க
மறந்து விட்டான்..
உன்னைக் கொடுத்த ஆண்டவன்
உன்னை அருகில் வைக்க
மறந்து விட்டான்..
நான் சிரித்தால்
என்னுடன் சேர்ந்து சிரிக்க
இன்று நீ என்னுடன் இல்லை..
மறந்தும் அழுதுவிடாதே!
உன் கண்ணீரைத் துடைக்க
ஓடோடி வருவேன்
என் அன்பு மகளே..!

**து.காயத்ரி**

**இளங்கலை வேதியியல் முதலாமாண்டு**

## மருதுபாண்டியர்

**முன்னுரை**

இருநூறு ஆண்டுகளுக்கு முன் சிவகங்கை பகுதியை மருதுபாண்டி எனும் சிற்றரசன் ஆண்டு வந்தார். இல்லை என்று வந்தவர்க்கு அவர் ஒருபோதும் இல்லை என்று கூறாதவர். குடிமக்களையும் குல தெய்வங்களையும் ஒரே மாதிரி நேசித்தவர். இவர் எதிரிகளை விரட்டிச் சிதறியடித்து உதிரிகளாக்கும் தீரர், சூரர், வீரமிக்க அவரிடம் ஈரமும் இருந்தது என்பது அவரின் மறுபக்கம்.

**பகைவரின் செயல்**

ஒருமுறை திருக்கோட்டியூரில் பெருமாள் கோயிலுக்கு எதிரிலிருந்த மண்டபத்தில் தங்கியிருந்தார் மருதுபாண்டி. அவருடைய வலக்கையில் பெரிய கட்டி ஏற்பட்டு அதனால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார். அச்சமயம் பகைவர் சிலர் அவரைச் சிறைபிடிக்க முயற்சி செய்தனர். படுத்திருந்த அவர் நெஞ்சு துடித்து எழுந்தார். வலக்கையின் வலியையும் பொருட்படுத்தாமல் குதிரையின் மீதேறிப் பகைவர்களை முறியடிக்க விரைந்தார்.பகைவர்கள் அவரைச் சூழ்ந்து கடுமையாகத் தாக்க முயன்றனர். அவர் காற்றாய் சுழன்று கடிதில் பகைவர்களை எதிர்த்தார். பகைவர்களை நாற்றிசையிலும் சிதறடித்தார். பின் தொடர்ந்து வந்ததால் பிடிபடக் கூடாது என்ற எண்ணத்தால் குதிரையை விரையச் செய்தார்.

**மருதுபாண்டியின் பணிவு**

குதிரை இரவெல்லாம் ஓடியது. மருதுபாண்டியனின் மிரட்டலுக்குக் பணிந்து வாயில் நுரை தள்ள ஓடிய குதிரை ஓரூரின் தெருவில் போய் நின்றது. அப்போது பசியும் தாகமும் சோர்வும் நிறைந்த மருதுபாண்டி தெருவாசலில் கோலமிடும் கிழவியைக் கும்பிட்டார்.

**கிழவியின் செயல்**

எடுப்பான தோற்றம் கொண்ட அவரையும் அவரது குதிரையையும் மாறி மாறிப் பார்த்த கிழவி மகனே யாரப்பா நீ? உனக்கு என்ன வேண்டும்? என்று கேட்டாள். அம்மா பசியும் தாகமும் என்னை மிகவும் வருத்துகின்றன. சாப்பிட ஏதாவது இருந்தால் கொடுங்கள் என்றார்.இரவு மிச்சமான பழைய சோறு தான் இருக்கிறது. ஆனால் உன்னைப் பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளை மாதிரி தெரிகிறது. எப்படி உனக்குப் பழைய சோற்றைத் தருவது? என்றாள் கிழவி. அம்மா நீங்கள் தரும் இந்தச் சோறு பழைய சோறு அல்ல கிடைத்தற்கரிய அமுதம் என்றார். பசி ருசியறியாது என்பதை மெய்ப்பிக்கும் வகையில் மருதுபாண்டி பழைய சோற்றைச் சுவைத்துச் சாப்பிட்டார். அருமை அருமை என்று பாராட்டினார்.

**மறு உதவி**

அம்மா நீங்கள் இன்னொரு உதவியையும் செய்ய வேண்டும்.என்றார் மருதுபாண்டி. குதிரைக்கு உணவும் அதற்கு தங்குவதற்கு இடமும் நான் ஓய்வெடுத்துக் கொள்ள சிறிய இடமும் வேண்டும் என்றார். அதற்குக் கிழவி ப்பூ... இதெல்லாம் பெரிய உதவியா? என்றாள்.

அவ்வாறே ஏற்பாடும் செய்து கொடுத்தாள். மருதுபாண்டி ஒரு பனையோலையை எடுத்து ஏதோ ஒன்றை எழுதிக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார். தனது பேரன்கள் வெளியூர் சென்றுள்ளனர் என்ற தகவலையும் காதில் வாங்கிக் கொண்டு மருதுபாண்டி குதிரையைச் செலுத்தினார்.

**மருதுபாண்டியின் பண்பு**

கிழவியின் பேரன்கள் வந்ததும் பனையோலையைக் கொடுத்தாள் கிழவி. படித்ததும் அவர்கள் உள்ளம் மகிழ்ந்தனர். அவ்வோலையைச் சிவகங்கைக்கு எடுத்துச் செல்வதற்குள் மருதுபாண்டி பகைவர்களால் சிறை வைக்கப்பட்டார். மருதுபாண்டியிடம் உனது இறுதி விருப்பம் என்ன? என்று கேட்டதற்கு நான் என் மக்களுக்குத் தானமாக வழங்கியவைகளை அவரவர்களுக்கே உரிமையாக்க வேண்டும் என்றார்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் கிழவி அந்த ஓலையைப் பகைவர்களிடம் கொடுத்தாள். அவள் வசித்த ஊர் கிழவிக்குச் சொந்தம் என்று அறிவித்தனர். பழைய சோறு கொடுத்தவளுக்கு இவ்வளவு பெரிய பரிசா என்று கிழவி அதிர்ச்சியில் உறைந்து போய் நிள்றாள். கிழவியுடன் பகைவர்களும் வியந்து நின்றனர்.

அந்த ஊர்தான் சிவகங்கைக்கு அருகில் உள்ள பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல். இப்பெயர் இன்றும் வழக்கில் உள்ளது என்பது இன்னும் சிறப்பு.

**முடிவுரை**

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

என்னும் திருக்குறளுக்கு உரிய எடுத்துக்காட்டாய் விளங்கியவர் மருதுபாண்டி. இவர் தினையளவு உதவிக்குப் பனையளவு நன்றியைச் செலுத்தியவர். நன்றி மறவாமையே உயரிய மனிதப் பண்பு என்பதை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் முடிவாகும்.

**தொகுப்பு**
**சி.இளங்கோ**
**இளங்கலை முதலாமாண்டு நுண்ணுயிரியல்**

***எழுத்தாணி – 4***

## பெத்த மனசு

ஆணும் பெண்ணும் பெற்றோர்க்குத் தெரியாமல் காதல் கொள்ளுதல் என்பது உலகெங்கிலும் நடக்கின்ற ஒன்று. இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து தமிழ்ப் பாரம்பரியத்தில் தொடர்ந்து வருகின்றது. ஆனால் அன்று ஒரு நாகரிகம் இருந்தது, இன்பமும் துயரமும் கலந்து இருந்தது. எப்படியென்று அகநானூறு என்னும்

*பழந்தமிழ் நூல் எடுத்தியம்புவதைப் பாருங்கள்.*

*பெற்றோர்க்குத் தெரியாமல் காதல் வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாள் தலைவி (பெண்). தலைவனும் தலைவியும் சந்தித்து உரையாடுவதற்கு ஏற்ற இடமில்லை. காரணம் பல இடையூறுகள் இருந்து கொண்டே வருகின்றன. ஒரு கட்டத்திற்கு மேல் பெண்ணை வீட்டுக்குள்ளே வைத்து அடைத்தும் விடுகின்றனர். இவ்வளவும் கண்டு பொறுக்க முடியாத பெண் தனது அன்பாளனுடன் வீட்டை விட்டு வெளியேறிவிடுகிறாள். கடுமையான காடு வழியாக இருவரும் ஓடிவிட்டனர் என்ற செய்தி கிடைக்கிறது. இதைக் கேட்ட தாயின் மனது எப்படித் தாங்கும்? புலம்புகிறாள், அழுகிறாள். தாய் புலம்பிக்கொண்டிருப்பதைக் கண்ட பக்கத்து வீட்டார்கள். அழாதே! அழாதே! என்று ஆறுதல் கூறுகிறார்கள். ஆனால் பொறுக்க முடியாமல் ஆறுதல் கூறியவர்களைப் பார்த்துக் கீழ்வருமாறு புலம்பித் தீர்க்கிறாள்.*

***கவிதை வடிவம்***

*வெயில்! வெயில்!*
*கடுமையான வெயில்!*
*மலையே பிளக்கும்படி*
*சூரியன்*
*சுட்டெரித்துக் கொண்டிருக்கிறான்..*
*ஈந்து மரத்தில்*
*சுகமாய் வாழ்ந்து வந்த*
*பறவையினங்கள்*
*சுடு வெயிலால் சோர்வடைந்தன..*
*உளி போன்ற கற்கள்*
*உறுத்திக் கொண்டு நிற்கின்றன..*
*நடந்தால் கால்களைப்*
*பதம் பார்த்துவிடும்*
*கொடிய பாதை அது..*
*எப்போது என்ன நடக்கும் என்பது*
*யாருக்கும் தெரியாத மூங்கில் காடு..*
*திடீரென தீப்பிடிக்கும்*
*பாதகமும் உண்டு..*
*இந்த அடர்ந்த காட்டில்*
*கருப்பு யானை போன்று*
*வீரம் கொண்ட ஆண்மகனைப்*
*பற்றிக் கொண்டு சென்று விட்டாள்*
*என் அன்பு மகள்..*
*அதற்காக நான் வருந்தவில்லை..*
*ஆனால்*
*என்னை*
*நினைத்துப் பார்த்தாளா அவள்..?*
*எனக்கு ஆறுதலே*
*அவள் ஒருத்தி தானே..?*
*உலையில் ஊதும்*
*ஊதுகுழாய் போல*
*மெலிந்து போகிறேன்..*
*என் கவலை அவளுக்கு*
*ஏன் புரியவில்லை..?*
*தீயில் வெந்து சாகின்றேன்..*
*உறக்கம் இன்றி உளறுகிறேன்..*

இப்படி புலம்பவிட்டுச் சென்றுவிட்டாள்
என் அன்பு மகள்..
ஐயோ என்ன செய்வேன்..?
அன்றொரு நாள்
வெண்ணி என்னும் போர்க்களத்தில்
கரிகால் சோழனொடு போர் செய்து
வீழ்ந்தான் பெருஞ்சேரலாதன்..
எப்படித் தெரியுமா..?
நெஞ்சில் குத்திய அம்பு
புறமுதுகு வரை சென்று
புண்ணாகிப்போனதால்
வெக்கப்பட்டு வாளால்
வடக்கிருந்து வீழ்ந்தான்..
துன்பம் தரக்கூடியது தான்
என்றாலும்
பெருஞ்சேரலாதன் செயலில்
இன்பமும் இருந்தது..
செய்தி கேட்ட மக்களும்
மன்னன் வழியில்
உயிர் துறந்தனர்...
ஆனால்
என் மகள் என்னைப் பிரிந்தும்
எனது உடம்பில்
உயிர் ஒட்டிக்கொண்டு
இருக்கிறதே
இந்த
உயிரைத்தான் நான் வெறுக்கின்றேன்..
என் மகளை அல்ல..!

இந்த செய்தியைத் தருகின்ற பழம்பெரும் பாடலை எழுதியவர் மாமூலனார். இதோ அந்தப் பாடல்..

காய்ந்து செலற் கனலி கல்பகத் தெறுதலின்
ஈந்து குருகு உருகும் என்றூழ் நீள் இடை
உளி முக வெம்பரல் அடி வருந்துறாலின்
விளி முறை அறியா வேய் கரி கானம்
வயக் களிற்று அன்ன காளையோடு என் மகள்
கழிந்ததற்கு அழிந்தன்றோஇலெனேஒழிந்து யாம்
ஊது உலைக்குருகின் உள்உயிர்த்து அசைஇ
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு
கண்படை பெறேன் கனவ ஒண் படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழி கள மருங்கின் வாள் வடக்கிருந்தென
இன்னா இன் உரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும்பிறிது ஆகியாங்கு பிரிந்து இவண்
காதல் வேண்டி எற் துறந்து
போதல் செல்லா என் உயிரோடு புலந்தே
(அகநானூறு : 55)

## உரைவடிவம்

மனிதர்களுக்குத் துன்பம் விளைவிக்கின்ற கொடுமையான காட்டின் வழியாக என் மகள் வீரன் ஒருவனுடன் சென்றுவிட்டாள். நான் இப்பொழுது புலம்புவது அவளின் பிரிவை நினைத்து அல்ல.

ஒருகாலத்தில் வெண்ணி என்கின்ற இடத்தில் கரிகால் வளவனோடு போர் செய்த பெருஞ்சேரலாதன் போரில் அம்பு பட்டு வீழ்ந்தான். வீரமரணமே அடைந்தாலும் அம்பு புறமுதுகில் பட்டதால் இழுக்கு என்று நினைத்து வடக்கிருந்து உயிர் துறந்தான். இந்தச் செய்தியைக் கேட்ட அவன் நாட்டு மக்கள் துன்பத்திலும் ஓர் இன்பச்

*செய்தியெனக் கருதித் தாங்களும் உயிர் துறந்தனர்.*

*இவ்வளவு துன்பம் அடைந்தும் எனது உயிர் இன்னும் போகாமல் இருக்கிறதே. இதை நினைத்துத்தான் நான் அதிகம் வருந்துகின்றேன். என் மகளை நினைத்து அல்ல என்பது இதன் பொருள்.*

### பழந்தமிழ்ச்சொற்கள்

*கனலி - சூரியன், தெறுதல் - சுடுதல், ஈந்து – பழங்காலத்து மரம், குருகு – கொக்கு போன்ற ஒரு பறவை, கனவ – வாய் புலம்புதல், பறந்தலை – போர்க்களம்*

### குறிப்பு

*உயிரை விட, பெற்ற மகளை அதிகம் நேசித்த பெற்றோர் வாழ்ந்த பரம்பரை, நம் தமிழ்ப்பரம்பரை.*

## அன்பு

*வதைத்தாலும் வார்த்தைகளை மறக்கும்*
*புதைத்தாலும் பூக்களாய் பூக்கும்*
*பிரித்தாலும்*
*உன்னை மட்டும் நினைக்கும்*
*எரித்தாலும் விளக்காய் ஒளிரும்*
*நீ புன்னகை காட்டு*
*உனக்காய் வியர்வை கொட்டும்*
*உணர்வும் உயிரும் ஒன்றாக*
*துன்பம் பகிரும் இரண்டாக*
*தாழ்வும் உயர்வும் என்றாக*
*உதவும் நட்பு நன்றாக*
*காசு பணம் சேர்க்காது தனக்காக*
*உடலோடு உயிரைத்*
*தரும் உனக்காக*
*கேட்காமலே எடுக்கும்*
*எடுக்காமலே கொடுக்கும்*
*கொடுத்ததை உடனே மறக்கும்*
*நீ வியர்வை சிந்து*
*உனக்காய் குருதி கொடுக்கும்*
*நீ குருதி வடித்தால் போதும்*
*உனக்காய்*
*உடனே உயிரை விடுக்கும்...*
*அதன் பெயர்தான் அன்பு..!*

**வெ.ஷாலினி**
**இளங்கலை முதலாமாண்டு நுண்ணுயிரியல்**

## தன்னம்பிக்கை

*இனியவனே.!*
*தன்னம்பிக்கை உடையவனே..!*
*நீ நிமிர்ந்து நின்றால்*
*வானமும் உனக்குக் குடை..*
*எழுச்சியுடன் நடைபோட்டால்*
*முட்கள் உனக்குப் படிக்கட்டுகள்..*
*புரட்சியுடன்*
*புயலாய் புறப்பட்டால்*
*மலைகள்*
*உனக்கு மாலைகள்.!*
*உறுதி கொண்டால்*
*இதை நீ உணர்ந்து கொண்டால்*
*உலகம் உன் கையில்*
*காலம் உன் காலடியில்..*

**மௌலி கருப்பசாமி**
**இளங்கலை முதலாமாண்டு நுண்ணுயிரியல்**

## மழை

*வானம் வடிக்கும் கண்ணீராக*
*பூமியில் விழுந்து*
*பயிரின் வளர்ச்சிக்கு நீராய்*
*உதவும் மழைநீரே.!*
*மனிதனின் உழைப்புக்கு*
*நல்ல நண்பனாய்..*
*தாகத்திற்கு அழியா*
*அமிர்தமாய்..*
*மண்ணிற்கு ஆத்மாவாய்..*
*வானிற்குப் பிரியா உயிராய்*
*பொழிந்து பரவுகிறாய்..*
*உந்தன் ஒரு துளி*
*பல உயிர்த்துளி..*
*உந்தன் ஆவேசம்*
*பொல்லாத வெள்ளம்..*
*உன்னைக் கட்டுப்படுத்தவோ*
*யாரும் இல்லை..*
*ஆகையால்*
*உன்னைப் பாதுகாக்க*
*போடுகிறோம் சிறந்த திட்டம்..*
*உந்தன் வெள்ளை மேனியும்*
*இனிப்பான பேச்சும்*
*கலங்துவிடுமோ அந்த*
*உப்புக்கடலில்..*
*அதனால் தடைபோட்டுச் சேமிக்கிறேன்*
*மழைநீர் சேகரிப்பு முறையில்..*

***ம.சரத்குமார்***
***இளங்கலை முதலாமாண்டு நுண்ணுயிரியல்***

## திருமூலரின் அறிவியல்

*கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலர் 63 நாயன்மார்களில் ஒருவராகவும் பதினெண் சித்தர்களில் ஒருவராகவும் உள்ளார். இவர் அருளிய திருமந்திர மாலை 3000 பாடல்களைக் கொண்டது. இது பன்னிரு சைவத் திருமுறைகளில் 10 ஆவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.*

*இன்றைய விஞ்ஞான உலகில் அணுவைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் அணுவின் அங்கமான ஹைட்ரோஜன் என்பதையும் கண்டுபிடித்தார்கள். அதனையும் பகுத்து ஹக்ஸ்போசோன் என்பதையும் கண்டுபிடித்துள்ளார்கள். ஹைட்ரோஜன் அளவு – 0.000000212 mm ஹக்ஸ்போசோன். ஹைட்ரோட்ஜென்னின் அளவில் பல மடங்கு சிறியதாக இருக்கும் எனக் கூறி, கணக்கிட முயற்சி செய்து வருகின்றனர்.*

*இன்றைய அறிவியல் கூறுவது இப்படி. ஆனால் 1000 ஆண்டுகளுக்கு முந்தைய நமது திருமூலர்*

*அணுவின் அணுவினை ஆதிபிரானை*
*அணுவின் அணுவினை ஆயிரங்கூறிட்டு*
*அணுவின் அணுவினை அணுக வல்லார்க்கு*

அணுவின் அணுவினை அணுகலுமாமே
சீவன் என்ன சிவன் என்ன வேறில்லை
மேவிய சிவன் வடிவது சொல்லில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறுதி ஆயிரம் ஆயிளால்
ஆவியின் கூறு நூறாயிரத்து ஒன்றே

**பொருள்**

சிவனுடைய உருவத்தைச் சொல்ல வேண்டுமாயின் பசுவின் முடியை எடுத்து ஆயிரமாகப் பிரித்துப் பின் அதில் ஒன்றை நான்காயிரமாகப் பிரித்தால் அதில் ஒன்றே சிவன் வடிவு.

ஹைட்ரோஜன் அளவு – 0.000000212 mm திருமூலர் கூற்றுப்படி.

பசுவின் முடியின் அடர்த்தி 100 மைக்ரான் எனக் கொள்வோம். இவை 100 ஆக பிரித்தால் 0.1/1000=0.001mm இதை 1000 ஆல் வகுத்தால் 0.001/1000=0.000001mm இதை 4000 ஆல் வகுத்தால்

0.000001/4000 = 0.00000000025mm

இதுவே சிவனின் அளவு என்கிறார் திருமூலர். இப்போதைய விஞ்ஞானிகள் அளவிடமுயற்சிக்கும் ஹிக்ஸ்போசோன் அளவு இதுவாகத்தான் இருக்க முடியும்.

**தொகுப்பு**
**சா.குணசுந்தரி**
**தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு**

**செம்மொழி – காலக்கோடு**

1901 – மதுரைத் தமிழ்ச் சங்க இதழான செந்தமிழில் பரிதிமாற் கரைஞரின் உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரை வெளியிடப்பட்டது.

1918 – மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றி அதை இந்திய அரசுக்கும் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி வற்புறுத்தியது.

1919 – கரந்தைத் தமிழ்ச்சங்கம் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியது.

1966 – உயர்தனிச் செம்மொழி என்னும் ஆங்கில நூல் தேவநேயப்பாவாணரால் எழுதி வெளியிடப்பட்டது.

2004 – நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது.

**தொகுப்பு**
**செ. உஷா**
**தமிழ் - இளங்கலை இரண்டாமாண்டு**

## 33

கைபர் கணவாய் நீளம் - 33 மைல்
மனித உடலில் 33 முள்ளெழும்புகள் உள்ளன

*ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகள்*

*மாவீரர் அலெக்ஸாண்டர் 33 வயதில் காலமானார்*

*பக்ரைன் நாடு 33 சிறு தீவுகளால் ஆனது*

*தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் 33 வயதில் மறைந்தார்*

*சேரன் செங்குட்டுவன் இமயமலை சென்று வர 33 மாதங்கள் ஆயின.'*

**தொகுப்பு**

**மு.ஆதிபவானி**

**தமிழ் - இளங்கலை இரண்டாமாண்டு**

## அட அப்படியா..!

*மூளையானது ஜீரோ வாட்ஸ் பல்பு பயன்படுத்தும் அளவு மின்சக்தியால் இயங்குகிறது.*

*அமெரிக்காவில் 195 ஆம் ஆண்டு ஒரு குரங்கு புகைப்பிடித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. அது உறுதி செய்யப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டது.*

*நாய்களுக்கென தனித் தொலைக்காட்சி சானல் அமெரிக்காவில் ஒளிபரப்பாகிறது. அந்தத் தொலைக்காட்சியின் பெயர் DOGTV*

*மீன்களில் 1200 வகை மீன் இனங்கள் விஷமுள்ளவை என அறியப்பட்டு உள்ளன. பாம்புகளில் கூட இவ்வளவு எண்ணிக்கையில் விஷமுள்ளவை கிடையாது.*

*புகழ் பெற்ற டைட்டானிக் கப்பலைத் தயாரிக்க 7 மில்லியன் அமெரிக்க டாடலர்கள் செலவாகியுள்ளன. ஆனால் டைட்டானிக் படம் தயாரிக்க 200 மில்லியன் டாலர் செலவிட்டார்கள்.*

*விலங்குகளிலேயே அதிகம் சோம்பேறித்தனம் கொண்டது ஆண் சிங்கம்.*

*நாம் கோபப்படும் போது 43 தசைகள் இயங்குகின்றன.*

*யானைக்குத் தும்பிக்கையே பிரதான உறுப்பு. இது 40 ஆயிரம் தசைகளால் ஆனது.*

*ஆசிய யானைகளில் ஆண் யானைக்கு மட்டுமே தந்தம் இருக்கும். ஆப்பிரிக்க யானைகளில் ஆண்-பெண் இரண்டிற்கும் தந்தம் உண்டு.*

**தொகுப்பு**

**G. நந்தினி**

**உயிர்த்தொழில் நுட்பவியல்**

**இளங்கலை முதலாமாண்டு**

## பேராசை

*வாழ வேண்டும்*
*சாகும் வரை அல்ல*
*நம்மை*
*வெறுத்தவர்கள்*

*வாழ்த்தும் வரை..*
*வெறுக்க வேண்டும்*
*மனிதர்களை அல்ல*
*பேராசைப்படுதலை..!*

***பி.கிருஷ்ணமூர்த்தி***
***மேலாண்மையியல் இளங்கலை முதலாமாண்டு***

## கவியே உம்மை ஆராதிக்கிறேன்

*நாடு என்னும் சோலையிலே*
*பூத்துக் குலுங்கிய நந்தவனமோ!*
*பெண்ணுரிமைக்குப் பாடுபட்ட*
*வீரக் கவிஞனே!*
*உம் தமிழால் என்னை ஈர்த்தாய்*
*உன் வார்த்தைகளோ*
*தேனினும் இனியது*
*எட்டயபுரத்தில் பிறந்து*
*இமயத்தையே எட்டிப்பிடித்த*
*கவிஞனே!*
*சாதிகள் இல்லையெனக் கூறி*
*அர்த்தமோடு வாழ்ந்தவரே*
*தலைகுனிந்து நீர் எழுதிய*
*கவிதையே*
*அனைவரையும்*
*தலைநிமிரச் செய்துள்ளது*
*வெள்ளையனிடம் அடிமைப்பட்ட எம்மை*
*விழிக்கச்செய்தது உம் கவியே*
*மண்ணைப் பார்த்து நடந்த பெண்ணை*
*தலைநிமிர வைத்தது உம் கவியே*
*ஒற்றுமையே உம் வேத வாக்கு*
*தாய்மையின் வடிவை*
*இனிய தமிழால்*
*உணர்த்தியது உம் கவியே!*
*தமிழின் விதையாக நீர் இருக்க*
*பல மரமாக*
*எழுந்த கவிஞர்கள் பலர்*
*தேனினும் இனியது தமிழ்*
*தமிழினும் இனியது உம் கவியே!*
*பூவில் இருக்கும் பனித்துளிப் போல்*
*அத்தனை அழகு உம் கவி!*
*கவியே உம்மை ஆராதிக்கிறேன்..!*

## கண்டுபிடியுங்கள் கடவுளை

*வறுமை இங்கு வதைத்த போதும்*
*சாதிக்கொடுமை*
*சரித்திரமான போதும்*
*உறைவிடம்*
*உருவில்லாமல் போனபோதும்*
*நீதிகள்*
*நிலைதடுமாறிப் போனபோதும்*
*இயற்கை தன் அழகை*
*இழந்த போதும்*
*சுனாமியே உயிரைப்*
*பறித்த போதும்*
*எங்கே ஒழிந்து கொண்டான்*
*உன் கடவுள்..?*
*கடவுள் என்று கதைக்கிறீர்களே*
*இணையில்லா கொடுமை*
*நடக்கும் உலகிலே*
*உன் இறைவன் இருந்தால்*
*இழுத்து வா அவனை*
*இருட்டறையில் அடைப்போம்...!*

***எஸ்.மகேஸ்வரி 'அ' பிரிவு***
***இளங்கலை உயிர்த்தொழில் நுட்பவியல்***

## குழந்தைகள்

குழந்தைகள்
பொய் சொல்ல வேண்டியதில்லை..
ஏதிர்பார்த்து
ஏமாற வேண்டியதில்லை..
வெட்டிக் கதைகள்
பேச வேண்டியதில்லை..
கவலையால்
தூக்கம் கெட வேண்டியதில்லை..
முகத்திற்கு முன்
சிரித்துப் பேசி
முதுகுக்குப் பின்
குறைத்துப் பேச வேண்டியதில்லை..
ஊருக்கு உபதேசம்
செய்ய வேண்டியதில்லை..
குழந்தைகள்
இவ்வுலகத்தின்
ஆசிர்வதிக்கப்பட்ட ஜீவராசி..

**அ.புவனேஸ்வரன்**
**மேலாண்மையியல் இளங்கலை முதலாமாண்டு**

## மழைநீர் சேகரிப்பு

மீன்கள் அழுததால்
கடல்கள் நிரம்பின..
சூரியனின் கோபத்தால்
கடல்நீர் ஆவியானது..
லேசான மனம் படைத்ததால்
மேகமாய்
காற்றில் மிதந்தது..
பிள்ளைகளாகிய
குளிர்காற்றும் மேகமும்
சண்டையிடுவதாலோ என்னவோ
இடிமுழக்கத்துடன்
வானம் அழுகிறது..
இல்லை இல்லை
மரங்களை வெட்டுவதால்
வானம் அழுகிறது
வலி தாங்கமுடியாமல்
பிளாஸ்டிக்கை எரிப்பதால்
வானம் அழுகிறது
மூச்சுத் திணறி..
இடிமுழக்கத்துடன்
கெஞ்சுகிறது
மழைநீரைச் சேமிக்குமாறு..

**ஜெ.ஞானபிரகாஷ்**
**உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை முதலாமாண்டு**

## தாய்

அவள் நினைவு இருக்கும் வரை
எமன் கூட உன்னை
ஒன்றும் செய்ய முடியாது..!
ஆனால்
அவளை மறந்த பின்பு
கடவுள் கூட உன்னைக்
காப்பாற்ற முடியாது..
அவள் தான்
உண்மையான தாய்..

**ஆர்.நதியா**
**உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை முதலாமாண்டு**

## வறுமைமையின் துயரங்கள்

*தொலைபேசி கைப்பேசியாக மாற*
*ஒத்தவழிப்பாதை*
*தார்ச்சாலையாக மாற*
*கூரைகள் அடுக்குமாடியாக மாற*
*கட்டை வண்டிகள்*
*கனரக வாகனங்களாக மாற*
*வார்டு மெம்பர்*
*கவுன்சிலராக மாற*
*வறுமை மட்டும்*
*இன்னும் மாறாமல் துரத்துகிறது..*
*பணக்காரன்*
*விமானத்தில் பறக்கின்றான்..*
*ஏழையோ*
*அவமானத்தால் சாகின்றான்..*
*ஏ.சி.காற்றில் உறக்கம்*
*பணக்காரனுக்கு..*
*ஓ.சி.சோற்றில் இறப்பு*
*ஏழைக்கு..*
*ஏழைக்கும் பசி..*
*ஏழைக் குழந்தைக்கும் பசி..*
*இதோ வெற்றிகரமாக*
*அடுத்த தலைமுறை*
*டாய்லெட் கழுவுவதற்கும்..*
*மூடை இழுப்பதற்கும்..*
*தயாராகின்றனர்..*
*நாம் இன்னும் பேசிக்கொண்டு தான்*
*இருக்கிறோம்..*
*வறுமையொழிய பாடுபடுவோம்*
*வறுமையொழிய பாடுபடுவோம் என்று..*

***தா.எ.ஸரன்ஸ் காந்த்***
***இளங்கலை முதலாமாண்டு நுண்ணுயிரியல்***

## நான் அப்படித்தான்

*நான் பைத்தியக்காரன்*
*வாழத் தெரியாதவன்*
*சிலவேளை போராளியும் கூட*
*இவையனைத்தும்*
*சமூகம் எனக்கிட்ட*
*புனைபெயர்கள்..*
*நான் எதுவும் தெரியாதவன்தான்*
*பசியால் அழுபவனை*
*உங்களைப் போல்*
*கண்டுகொள்ளாது செல்லத்*
*தெரியாதவன்..*
*உதவி என்று வந்தவனை*
*உங்களைப் போல்*
*உதாசினப்படுத்தத் தெரியாதவன்..*
*மனித உயிரை மனிதனே*
*வேட்டையாடும் நேரத்தில்*
*உங்களைப் போல்*
*மட்டைப்பந்து பார்க்கத்*
*தெரியாதவன்*
*ஆனால்*
*சமூக அக்கறை இல்லாதார்*
*மத்தியில்*
*சமூகம் அக்கறையில் இல்லை*
*எனத் தெரிந்தவன்..*
*அன்பும் ஆதரவும்*
*அனைவருக்கும்*
*கொடுக்கத் தெரிந்தவன்...*
*உங்கள் அகராதியில்*
*வாழத் தெரியாத இந்த*

*எவனோ ஒருவன்*
*மூளையில் தோன்றியதை*
*முனகிக்கொண்டு*
*ஓர் மூலையில் வாழ்ந்து போகட்டும்..!*

**கோ.நந்தகோபால்**
**உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு.**

## தன்னம்பிக்கை

*கரிசல்காட்டுப் பூவாக*
*இருளில் மலர்ந்த நிலவாக*
*புல்லில் வந்த பனியாக*
*கதிரவனைக் கண்டு எழும்*
*சூரிய காந்தி போல*
*என்னுள் வியப்புடன் புகுந்தது*
*தன்னம்பிக்கை..*
*ஒற்றை வழிப்பாதை*
*பயணத்தில் துணையாக..*
*இருட்டைப் போக்கும்*
*சுடரொளியாக..*
*கவலையைப் போக்கும்*
*இன்பமாக..*
*நண்பனின் ஆதரவில்*
*நல்ல நண்பனாக..*
*தோல்விக்கு மருந்தாக..*
*வந்ததே தன்னம்பிக்கை..*
*துயரத்தில் மூழ்கியவனுக்கு*
*இன்பத்தைத் தந்து*
*தோல்வியில் துவண்டவனுக்கு*

*வெற்றியை அள்ளித் தரும்*
*தன்னம்பிக்கை..*

**ம.கார்த்திக்ராஜா**
**இளங்கலை முதலாமாண்டு நுண்ணுயிரியல்**

## நட்பு

*நான் சோர்வுற்ற போது*
*என்னைத் தாங்கிக் கொண்டாய்..*
*நான் உரிமையோடு*
*சாய்ந்து கொள்ள*
*தோள் கொடுத்தாய்..*
*நான் இளைப்பாறத் தேடிய போது*
*உன் மடி கொடுத்தாய்..*
*நான் துவண்டு போன*
*தருணங்களில்*
*தூக்கி நிறுத்தினாய்..*
*முடிந்தே போனதென்று இருந்த*
*என்னை ஆரம்பம் இதுவென*
*ஆருடம் சொல்லி*
*என்னை அன்பால் தழுவினாய்...*
*என் தேவை அறிந்து*
*உதவிகள் செய்து வந்தாய்..*
*பேசாமல் துரத்திய போதும்*
*பேசியே என்னுடன்*
*நட்பு பாராட்டினாய்..*
*வலிகள் உனக்கு ஆயிரம் தந்த போதும்*
*தாயாய் நின்று*
*என்னைத் தாங்கிக் கொண்டாய்..*
*என் தூயவனே*
*உன் நட்பு*
*மாணிக்கம் போன்றது..*
*பரிசுத்தமானது..*

உரிமையில் கோபப்பட்டது
தவறா என்பது தெரியாது எனக்கு..
ஆனால்
உன்னுடன் பேசும் பொழுது
என் பெற்றோருடன்
பேசிக்கொள்வதாய் உணருகிறேன்..
மறுக்காமல் பேசிவிடு நண்பா..!
உயிர் பிரியும்
கடைசி நிமிடம் வரை
உன் நட்பு எனக்கு வேண்டும்..
உன் நட்பு எனக்கு வேண்டும்..
உன் நட்பு மட்டும் வேண்டும்..

**மா.புவனேஸ்வரி**
**இளங்கலை முதலாமாண்டு நுண்ணுயிரியல்**

## மழைநீர்..

மீன்கள் அழுததால்
கடல்கள் நிரம்பின..
சூரியனின் கோபத்தால்
கடல்நீர் ஆவியானது..
லேசான மனம் படைத்ததால்
மேகமாய் காற்றில் மிதந்தது..
பிள்ளைகளாகிய
குளிர்காற்றும் மேகமும்
சண்டையிடுவதாலோ என்னவோ
இடிமுழக்கத்துடன்
வானம் அழுகிறது..?
இல்லை இல்லை
மரங்களை வெட்டுவதால்
வானம் அழுகிறது
வலி தாங்க முடியாமல்..
பிளாஸ்டிக்கை எரிப்பதால்
குமுறுகிறது மூச்சுத் திணறி...
இடிகுரலாகக் கெஞ்சுகிறது
மழையைச் சேமியுங்கள்
மழையைச் சேமியுங்கள் என்று..

**ஜெ.ஞானபிரகாஷ்**
**உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை முதலாமாண்டு.**

## செத்தான் சிதம்பரம்

அய்யோ சாகுற வயசா இது..? உன் தைரியத்த இனி யாருக்கிட்ட பாக்கப்போறேனோ..? சண்டாளன் எமனுக்கு அப்படி என்ன அவசரம்..? பாசக்கயிற வேற யாருக்காவது வீசியிருக்கக் கூடாதா..? மார்பில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்து தெருவைச் சுத்திசுத்தி வந்து பெருங்கூட்டத்தையே கூட்டிவிட்டாள் சவுந்தியம்மா..

இந்தா எலவு வீட்டுல போய் அழுவாம ஊருக்குள்ள வந்து ஏன் ஒப்பாரி வைக்கிற..? கரகரத்த குரலில் பெரியகருப்பன் சத்தம் போட்டதும் சவுந்தியம்மா வாயை முந்தானையால் பொத்திக்கொண்டு அய்யோ ஒப்பாரி வைக்கக் கூட ஒசரம் இல்லாம போய்ட்டேனா என் ராசா... என்று புலம்பியபடி எலவு வீட்டை நோக்கிப் பறந்தாள் சவுந்தி..

*யாருப்பா இந்தக் கெழவி ஒப்பாரி வச்சு ஊரையே கூட்டிப்புட்டா..?*

*செத்துப்போயிருக்காரே சிதம்பரம், அவரோட..*

*அவரோட..? அட சொல்லுப்பா*

*அவரோட அத்த மவ ப்பா..*

*ப்பூ அத்த மவதானா..?*

*ஏன் நீ என்னனு நெனச்ச..? இப்படி பேச்சு வளந்து கொண்டே போனத முருகையாவால் பொறுத்திருந்து கேக்க இஷ்டமில்ல.. வேகமாக நடயக் கட்டி வீட்டுக்காரங்களுட்ட பணம் வாங்கப் புறப்பட்டான்..*

*பாடை கட்ட மூங்கில், பானைமுட்டி, பாடை மாலை, அலங்காரப் பொருட்கள், வானவெடி, சுடுகாட்டுப் பொருட்கள் எல்லாம் வாங்க வேண்டும். இந்த வீட்டு எலவுக்கு மட்டுமல்ல ஊர்ல யாரு செத்தாலும் முருகையாதான் எல்லா பொருளும் வாங்கிட்டு வருவான்..*

*இத ஊர்ல பல பேரு சேவைனு நெனச்சுட்டு இருக்காய்ங்க.. ஆனா முருகையாவோட திருட்டு வேலைகள்ல இதுவும் ஒன்னு. எலவு வீட்ல எப்படியும் ஐயாயிரமாவது வாங்கிட்டுப் போய் நாலாயிரத்து ஐந்நூறுக்கு கணக்கும் காண்பிச்சுடுவான். ஆனா அவன் சட்டப் பையில கொறஞ்சது ஆயிரத்து ஐந்நூறாவது எட்டிப்பாத்துட்டு இருக்கும்.. எலவு விழுந்தா சந்தோசப்படுற ஒரே ஆளு முருகையா மட்டும் தான்.*

*அண்ணே டைம் ஆயிடுச்சு.. செய்ய வேண்டிய காரியம்லாம் அப்படியே கெடக்கு. பணம் கொடுத்திட்டீங்கனா ஆக வேண்டிய காரியங்கள வெரசா பாத்துறுவேன்..*

*எப்ப? எங்க? எப்படி பணம் கேக்கணுங்கற அத்தனை விவரமும் முருகையாவுக்கு அத்துப்படி. நெனச்ச பணத்த வாங்கிட்டுத்தான் வீட்ட விட்டு வெளிய வருவான். பயலுக்கு புத்தி படும்பயங்கரமா வேல செய்யும். இந்த சூதனம் ஊர்ல ஒரு பயலுக்கும் இல்லங்கறது எல்லாருக்கும் தெரிஞ்ச விசயம்..*

*சிதம்பரம் வீட்டுலயும் நெனச்சபடியே ஐயாயிரத்த வாங்கிட்டு பரபரப்பா வெளிக்கெளம்பிட்டான். பணம் வாங்கிட்டா ஒரு நிமிசத்துக்கு மேல நிக்கக் கூடாதுங்கறது முருகையாவோட தொழில் தர்மம். பெருசா ஒரு காரணமும் இல்ல. வேற யாராவது பங்குக்கு வந்துடக்கூடாதுங்கற பயம்தான்..*

*பொணத்த குளிப்பாட்டி, நீர்மாலை எடுக்க வச்சு, பாடைய கட்டி குழிக்குள்ள செம்முற வரைக்கும் முருகையா பக்குவமா பாத்துருவான்.. வெத்தலயோட பான்பராக்கயும் சேத்து வச்சு போதையோட தான் வேலைய*

பார்ப்பான். யாருக்கிட்டயும் பேசமாட்டான். யாரு புத்தி சொன்னாலும் பொருட்படுத்தவே மாட்டான்.. அது அவனுக்குப் புடிக்காது. யாருக்கோ சொல்ற மாதிரி வேலைய மட்டும் பாத்துக்கிட்டே இருப்பான்.

ஏம்பா இந்த முருகையா எங்க போய்த் தொலஞ்சான்..? காலைல ஐயா மகனுட்ட ஐயாயிரம் வாங்கிட்டுப் போனவன் அப்பிடியே போயிட்டானா? இந்தா இருக்குற கீழக்கோட்டைக்குப் போய் வர இன்னேரமா? னு மனோகரன் கோபப்பட ஆரம்பிச்சுட்டாரு. இப்படியொரு சத்தம் வந்துட்டா இப்பத்தான் யாரோ மனோகரனுக்கு ஊத்திவிட்டுருக்கானுங்கனு அர்த்தம். மனோகரனும் லேசுப்பட்ட ஆளு இல்ல. ஒரு காலத்துல மனோகரனும் செத்துப்போயிருக்குற சிதம்பரமும் ஒன்னா சேந்து போடாத ஆட்டமே இல்லயாம்.

அரசாங்கத்துல இருந்து வர்ற திட்டங்கள் எல்லாம் இந்த ரெண்டு பேர தாண்டித்தான் ஊருக்குள்ள வரும். அதுல நிறைய லாபம் பாத்துருக்காங்க. பிராடுத்தனம் பண்ணாலும் அதுல ஒரு மனுசத்தன்மையோடுதான் செஞ்சிருக்காங்க. காலனி வீடு கட்டுனதுல தான் ரெண்டு பேரும் பங்கு போட்டு கொள்ளையடிச்சுருக்காங்க. பங்கு சரியா வரலைங்ற கோபத்துல மனோகரன் சிதம்பரத்த கெட்ட கெட்ட வார்த்தைல திட்டுனதோடு முன்னாடி செஞ்ச தில்லாலங்கடிகளையும் போட்டு உடச்சுட்டாரு. அதுல இருந்து ரெண்டு பேரும் பேசிக்குறதில்லங்றது பழைய கதை.

ஆனா மக்களுக்கு சிதம்பரம் மேல ஒரு மரியாத இருந்துச்சு. கொள்ளையடிச்சாலும் மனுசன் எல்லாருக்கும் நல்லா செஞ்சாம்ப்பா.. இதுதான் சிதம்பரம் சேமிச்சு வச்சுருந்த பேரு.

பிரிஞ்சு போன மனோகரன், சிதம்பரத்தோட சாவுக்குத்தான் வந்துருக்காரு.

முருகையாவும் வந்துட்டான். ஏ முருகையா நீர் மாலை எடுக்க நேரமாச்சு. நீ இன்னும் பாடை கட்டாம இருக்குற? மூங்கில் தான் கெடக்கு. வாவரசம் குச்சியக் காணம்? வாவரசம் இல்லாம எப்படி நடுவ வளைப்ப?

பரபரப்பா மனோகரன் பேசி முடிச்சதும் எல்லாம் எங்களுக்குத் தெரியும் அவுகவுக சோலிகள மட்டும் பாருங்கனு ஒத்த வார்த்தைல முடிச்சுட்டு வெத்தலைய துப்பிப்புட்டு போயிட்டான். அது என்னவோ மனோகரன் மூஞ்சியில் துப்புன மாதிரியே இருந்துச்சுனு அந்த இடத்துல பேச்சு.

மனோகரன் நிதானம் இல்லாம, என் பங்காளி செத்துப் போயிட்டான்னு வர்றவங்க போறவங்களுக்கிட்டலாம் போதைல பொலம்ப ஆரம்பிச்சுட்டாரு. டேலேய் இன்னக்கி இன்னொரு பொணம் விழப்போகுதுடோய்.. னு சின்னப் பசங்க மனோகரன பாத்து நக்கலாக பேசிக்கிட்டுப் போனத பாத்து சில பெருசுகளாலயும் சிரிக்காம இருக்க முடியல.

பாடைய கட்டிட்டு முருகையா விறுவிறுனு வீட்டுக்குள்ள புகுந்து, அண்ணே வேல முடிஞ்சிடுச்சு. தூக்குற நேரம் பாத்துட்டு வந்தேன். 2 ஆம் பாதத்துல செத்துருக்காறாம். ஊருக்கு நல்லது இல்லயாம். நாளக்கி பளிங்குப் பாறைக்குப் போய் தோசம் கழிக்கனுமாம். அத நாளைக்கு நானே பாத்துக்குறேன். இப்ப 2.30 ல இருந்து 4.15 க்குள்ள எடுக்கணுமாம் சோசியரு குறிச்சுக் குடுத்துருக்காரு. இந்தாங்க னு துண்டு சீட்ட சிதம்பரத்தோட மூத்த மகன்கிட்ட காண்பிச்சான்..

சரி முருகையா எல்லாத்தயும் பொறுப்பா பாத்துக்க. இந்த டைம்லயே தூக்கிடலாம்.

சம்மந்தப்புரம் மூணும் வந்துடுச்சா.. வந்ததும் உள்ளூர் பச்சை எடுக்கணும்பா.. ஏம்ப்பா முருகையா நீர்மாலை எடுக்க நாடா துணி வாங்கிட்டு வந்துட்டியா..? நீர்மாலை சொம்பு, நூல்கண்டு, முட்டி எல்லாத்தயும் எடுத்து வையங்கப்பா. பிரேதத்த குளிப்பாட்டுன உடனே காரியத்த பாக்கணும். உலைல போட்ட அரிசி மாதிரி கொதிக்க ஆரம்பிச்சுட்டாரு லெட்சுமணன். ஏம்ப்பா மொட்டயடிக்க ஆள் சொல்லியாச்சா..? அப்பறம் சோணயன் சாவுல வெறும் பிளேட வச்சு சீவுன கதையா போயிடப் போகுது.

மனோகரண்ணே.! போய்ட்டு உள்ளூர் பச்சைய வரச் சொல்லுங்க. கால தாமதம் காரியத்துக்குக் கேடுனு தெரியாதா உனக்கு? போன்ணே ஊருக்குப் பெரிய மனுசன் கூட்டிக்கிட்டு வான்ணே...? னு ஏதோ ஒரு குரல் சொன்னவுடனே மனோகரன் வேட்டி நுனிய தூக்கி ஏத்திக்கட்டிக்கிட்டு மனுசன் விறுவிறுனு கொண்டு வந்து சேத்துட்டாரு..

வடக்கு தெற்கா வச்சு குளிப்பாட்டுங்கப்பா. இது கூடவா தெரியாது? போட்டுறாம தூக்கனும். டேய் சின்னப் பயலுகலாம் இங்கிட்டுப் போங்கடா. ஐஸ் பெட்டிக்குள்ள இருந்த உடம்பு. ஒட்டிக்கிட்டுத்தான் இருக்கும். தண்ணிய தொளிச்சுட்டு எடுங்கப்பா. ஏம்ப்பா ஐஸ்ல இருந்தத ஏம்ப்பா குளிப்பாட்டுறீங்க..?

சும்மா தெளிச்சுட்டு காரியத்த பாருங்கப்பா..

சும்மா ஆளாளுக்கு பேசாதீங்க. உள்ளூர்காரங்கனு நாங்க எதுக்கு இருக்குறோம்? னு குணசேகரன் கோபப்பட்டு கத்துனதுல எல்லாரும் ஆப்பாயிட்டானுங்க..

அந்த உரல எடுத்துட்டு வாங்க.. தலமாட்டுக்கிட்ட வைங்க.. முருகையா சொல்ல சொல்ல செய்ய எல்லாரும் அவன் முகத்தய பாத்துக்கிட்டு நின்னது நல்லா தெரியுது. உரல தலமாட்டுலயா வய்ப்பாங்க கால்மாட்டுலதான் வய்க்கனும் னு யாரோ வார்த்தய விட பெரிய கைகலப்பே வர இருந்துச்சு. குணசேகரன்தான் வெலக்கிவிட்டாரு.

தாலிய அறுக்கணும் நாச்சம்ம ஆத்தாவ கூட்டியாங்க. முருகையா எதஎதயோ எடுத்து வச்சுக்கிட்டு இருந்தான். இந்த உரல்ல ஆத்தாவ உக்கார வய்யுங்க.

முகத்துல நல்லா மஞ்சள பூசி, பெரிய பொட்டு வச்சு, தாலிய அறுத்த போது அய்யோ தாலிய அறுக்குறாங்களே னு நாச்சம்ம கத்தி தீத்துப்புடுச்சு. அதப் பாத்து பெரிய பெரிய ஆம்பளயாளுங்க கூட கண் கலங்கிப் போனத அவ்வளவு சீக்கிரம் யாரும் மறந்துட முடியாது.

ம்ம்ம் சரிசரி சீயக்காய் எண்ணெய் தொட்டு வைக்க வாங்க னு முருகையா கல் நெஞ்சக்காரன் மாதிரி சத்தம் போடத் தொடங்கினான். வரிசையா எல்லாரும் வெத்து உடம்ப பாத்து அம்புட்டு சனமும் அழுதுகிட்டே போனுச்சு..

பாடைய தூக்கி வடக்குத் தெற்கா வைய்ங்கப்பா..

அட பொறுங்கப்பா.. சடங்கெல்லாம் முடியட்டும்.. இன்னும் என்னய்யா இருக்கு உங்க சடங்கு..? யாரோ வெளியூர்காரன் சவுண்டு கூட்டத்துக்குள்ள வந்த வேகத்துல அமுங்கிவிட்டது..

பொம்பளைங்க மாரடிக்கணும், சம்பந்தப்புரம் எல்லாம் சடங்கு செய்யணும்………

யோவ் முருகையா! நீ பாடைய தூக்கிட்டு வாயா.! அதெல்லாம் சீக்கிரம் முடிஞ்சிரும். கடுப்பாகி போன முருகையா. அவன்அவன் சோலிகளப் பாருங்கய்யா எனக்குத் தெரியும். இப்பத்தான் ஆளாளுக்கு வேலை வைக்கிறீகளோ..? னு ரொம்ப கோபப்பட்டுட்டான் முருகையா.

சடங்கு எல்லாம் ஒரு வழியா முடிஞ்சது.

ஏம்ப்பா தலைமாட்ட ஒருத்தர் வாங்கி வைக்கப்புடாதா? தொங்குனபடியா தூக்குறது? என்ன ஆம்பளங்க? னு ஒரு கெளவி வாய்..

ஏம்ப்பா! எரிக்கிறதா? பொதைக்கிறதா? இதுவும் வெளியூர் காரனத்தான் இருக்கும். சொகமில்லாம கடந்த உடம்ப பொதக்கிறதுங்கிறது கட்டானிப்பட்டி ஊர்க்காரங்க வழக்கம். பாடைய தூக்கும் போது ஒரே ஓலம், ஒப்பாரி….

இளைஞர் பட்டாளம்தான் பாடைய தூக்குறது.. சின்னப் பசங்க கோவிந்தா கோவிந்தா னு கத்திக்கிட்டு அலப்பறய கூட்டிப்புட்டாய்ங்க.. ஆயிரம் சரம் சீனி வெடிய வேற போட்டுவிட்டாய்ங்க.. அது ரொம்ப நேரம் கழிச்சு மனோகரன் காலுக்குள்ள வெடிச்சதுல, வெக்காலி யாருடா அவன் வெடிய காலுக்குள்ள போட்டவன்னு பொலம்ப ஆரம்பிச்சுட்டாரு.. பயலுக சிரிச்சுக்கிட்டே செதறிட்டானுங்க.

இந்த இடத்துல நாம கொடம் ஒடைக்கக் கூடாதுப்பா.. தள்ளி வைய்ங்க தள்ளி வைய்ங்க.. முகம் வீட்ட பாத்து இருக்கனும்ப்பா…

வாங்கம்மா வந்து முட்டிய தூக்குங்க.. பொத்து விடுறா முருகையா.. வாக்கரிசி போடுறவுக போட்டுவிடுங்க.

அவ்வளவுதாம்ப்பா தூக்கு தூக்கு.. மறுபடியும் கோவிந்தா கோவிந்தா சத்தம்..

ஒரே ஆளு தூக்காம கை மாத்திக்கிருங்க பசங்களா.. ஒரு அக்கறை குரல். சுடுகாட்டை நோக்கி பாடை வேக வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது..

ஸ்ஸ்ஸப்ப்ப்பாாா.. வை வை வை வை… வடக்குத் தெற்குதான்.

இனி விடுங்கப்பா முருகையா பாத்துக்குவான்…

பாடைய மூனு ஆத்து ஆத்திட்டு தூக்கிப்போடுங்கப்பா. எத்தன காரியம் பாத்துருக்கீங்க. இன்னமுமா தெரியல.

பாடைய தூக்கிப் போட்ட உடனே போய்ட்டு மூனு வெட்டு வெட்டனும் மறந்துறாதீக..

மூனு மகன்களுக்கும் மொட்டையடிச்சாச்சு. வெரசா காரியத்த முடிப்பா முருகையா.

யாருப்பா குளிக்குள்ள எறங்குறது..?

ஒரு பெருசும் வாய தொறக்காது பாருவே னு எவனோ ஒருத்தன் மொணங்கிக்கிட்டு இருந்தான்.

எளந்தாரிக எறங்காதீகப்பா.. ஏம்ப்பா பெரிய ஆளுக எறங்கக் கூடாதா..?

ஒரு வழியா மன்னனும் மாணிக்கமும் எறங்க ரெடியாயிட்டாங்க..

மெல்ல மெல்ல சொல்லி வச்சு தான் ஏறனும். சொல்லி வச்சு தான் எறங்கனும்.

வாக்கரிசி போட்டுவிடுங்கப்பா..

மண்ண தள்ளிவிடுப்பா முருகையா. சொன்னவுடன் ஆளுக்காளு சொம்மிட்டானுங்க.

பொண மேட்டு மேல பாலு, எலனி, எள்ளு, தண்ணீர்விட்டு குச்சிய நட்டு வச்சுட்டு எல்லாம் கௌம்ப ஆரம்பிச்சுட்டாங்க..

நல்ல மனுசன். தானும் திண்ணாரு. ஊருக்கும் கொடுத்தாருப்பா..

அவ்வளவு தான் இனி யாரு சிதம்பரத்தபத்தி பேசப்போறது..?

**அகரன் - தமிழ்த்துறை**

## வைரஸ்

காந்தியும் காமராசரும்
கட்டியாண்ட இந்நாட்டை
கண்ட கண்டவர்களே ஆண்டுள்ளனர்..
இவ்வரசியலில் தான்
பணமும் கருப்பானது..
அரசாங்க கஜானாவை நிரப்புவதற்குப் பதிலாக
அவரவர் கஜானாவே நிரம்பியது..
கற்பு என்னும் கருவறையை
இளம் கன்னியர்கள்
அறியாது வாழ்கின்றனர்..
பெரியார் முடக்கிய
மூடநம்பிக்கையை
அறியா எம்மக்கள்
அவரையும் கடவுளின்
அவதாரம் என்றனர்..
நிலாச்சோறு சாப்பிட்ட
எம்மக்களுக்கு
அவரவர் பிள்ளைகளுக்கு
நின்று கூட சோறு ஊட்ட
நேரமில்லை..
கலாம் கண்ட கனவு
பகல் கனவா..?
வெற்றியைத் தேடும் முன்னர்
வலியை அனுபவிக்க வேண்டும்
என்கிற புத்தி இல்லாமல் போனது..
வறுமை ஒழிய வேண்டும்
வாழ்வு வெற வேண்டும் என்றால்
சமூக வைரஸ்களை
வேரோடு அழிக்க வேண்டும்..

**எஸ்.மௌலி கணேஷ்**
**உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## செவ்வாய் கிரகம்

இரத்தமும் சதையும்
சேர்ந்த அர்ப்ப உடல் செய்யும்
அனைத்துக் கொடுமையையும் தாங்கும்
அசாதாரணமான சக்தி
பூமி தான்..!
அடிமைகளும் ஆள்பவர்களும்
தொழிலாளிகளும்
முதலாளிகளும் சேர்ந்திராத
ஒரு பெரிய உருண்டைதான் பூமி..
பச்சைக் காட்டையெல்லாம்
அழித்துவிட்டான்..
நீர் வரத்துகளை
முடக்கிவிட்டான்..
காடுகளை அழித்துவிட்டு

காங்கிரீட்டுகளை கட்டிவிட்டான்..
மூன்று வேளை கஞ்சி குடித்து
முழு ஆனந்தமாய்
மண்ணில் புரண்டு..
வெள்ளம் பாய்ச்சி
விவசாயம் பார்த்த பூமி
போகுதடா தூரமாய்..
பூமியில் இனி இடமில்லை
இழப்பதற்கும்
அழிப்பதற்கும்
மானுட ஜீவன்களே.!
சென்றிடுவோம்
செவ்வாய் கிரகத்திற்கு
பிறகு அங்கும் போய் ஆரம்பிப்போம்
சாதி சமய சழக்குகளை..

**ச.தண்டபாணி**
**உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## பூ பறிக்க வருகிறோம்..!

கோட்டையின் கதவினைக்
கரையான் திண்பது போல
பெருமைகள் நிறைந்த நம் தேசத்தை
ஊழல் திண்று தீர்க்கிறது..
தலைநிமிர்ந்து நின்ற நம் தேசம்
தலைகுனிந்து நிற்கின்றது..
காரணம் யார்..?
பள்ளத்தாக்கு கொள்ளையர்களா?
நக்சலைட்டுகளா?
அடுத்த வேலை உணவுக்குப் போராடும்
ஏழை மக்களா?
ஓலைக்குடிசையில்
ஒதுங்கி வாழும்
பாமர சனங்களா..?
இல்லை இல்லை இல்லை
நாட்டை ஆளும்
சில அரசியல்வாதிகள்..
ஆம் இவர்கள் தான்
நாட்டை அழிக்கும்
வியாதிகள்..
லஞ்சம் வாங்கியவன்
கைது செய்யப்படுகிறான்..
அடுத்த நொடியில்
தண்டணையின்றி தப்பிவிடுகிறான்
ஊழலுக்கு ஊழல் கொடுத்து
ஓரம் கட்டிவிடுகின்றனர்..
எரிமலை வெடிக்கும் போது
அருகில் உள்ள வண்ணப் பூக்கள்
அழிந்து போகும்தான்..
ஆனால்
அப்பூக்கள் சில விதைகளை
விட்டுச் செல்லும்..
இதோ அந்த விட்டுப் போன
விதைகளில் மலர்ந்த
பூக்களைப் பறிக்க வருகிறோம்..
மொட்டுகளான
இளைய தலைமுறை..

**அ.அபுயாஸீர்**
**உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## அன்பு

கடவுளின் வரம் அன்பு
குழந்தையின் மழலை அன்பு

*தாய் குழந்தையைத்*
*தழுவுதல் அன்பு*
*தந்தையின் கோபம் அன்பு*
*அண்ணனின் பொறாமை அன்பு*
*நண்பனின் நம்பிக்கை அன்பு*
*ஆசிரியரின் கண்டிப்பு அன்பு*
*முதுமையின் தேடல் அன்பு*
*பிரிவின் சோகம் அன்பு*
*காதலின் தாகம் அன்பு*
*கோபத்தின் அர்த்தம் அன்பு*
*சோகத்தின் வருத்தம் அன்பு*
*பார்வையின் மோதல் அன்பு*
*இறப்பின் இரங்கலும் அன்பு*
*எங்கும் அன்பு*
*எதிலும் அன்பு..*

***சே. விவிதா***
***இளங்கலை முதலாமாண்டு நுண்ணுயிரியல்***

## தன்னம்பிக்கை

*தங்க மீன்களாய்*
*தண்ணீரில் மீன்களாய்*
*தண்ணீரில் நீந்த*
*துடுப்பு போல இருந்தாயே..*
*தாவிச் செல்லும்*
*மானின் வேகமாய்*
*தாகமாய் இருக்கும்*
*தனிமனிதனின் தாகமாய்*
*என்னுள் நீ இருந்தாய்..*
*முடியாது என்கிற*
*இருளைப் போக்கி*
*முடியும் என்ற விளக்கைத் தூண்டி*
*முன்னேற்றப் பாதையைத் தந்தாயே..*
*பம்பரச் சுறுசுறுப்பைப் போன்று*
*பாரெங்கும் பரந்து திரிய*
*என்னுள் குருதியாய்*
*குடிகொண்டாயே..!*
*நீ இருக்கும் வரை*
*என் இதயம் இடைவெளி விடாமல்*
*துடித்துக்கொண்டே இருக்கும்...*

***சு.சௌந்தரி***
***இளங்கலை முதலாமாண்டு நுண்ணுயிரியல்***

## தன்னம்பிக்கை

*மனித வாழ்க்கையில் வளர்ச்சி என்பது வட்டப்பாதையில் சுற்றிச் சுற்றி வந்த இடத்திற்கே வருவதல்ல. சுழன்று சுழன்று மேலே செல்லக்கூடிய சுழலேணி வளர்ச்சி. அது இந்தச் சுழலேணியின் படிகளில் தொடர்ந்து மேலேறிச் செல்ல ஒருவருக்குத் தன்னம்பிக்கை வேண்டும். அதுவே வாழ்க்கை மேம்பாட்டு என்ற தன்னம்பிக்கையைத் தரும். இந்த நன்னம்பிக்கையும் தன்னம்பிக்கையும் சேர்ந்திருந்தால் ஞாலம் கருதினும் கைகூடும்.*

***தன்னம்பிக்கை என்றால் என்ன?***

*தன்னம்பிக்கை என்பது ஒவ்வொரு மனிதனும் தன்னால் இதைச் செய்து முடிக்க முடியும் என்று நம்புவதும் நம்பிக்கையைச் செயல்படுத்த திட்டமிடுவதும் ஆகும். அதை*

நிறைவேற்ற முயற்சி செய்யும் போது தடைகளைக் கண்டு தளர்ந்து விடாமல் விடாமுயற்சியுடன் அந்தக் காரியத்தைச் சாதிக்கும் திசை நோக்கி முன்னேறுவதும் தான் தன்னம்பிக்கை ஆகும்.

முயற்சி திருவினையாக்கும் முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார் எனும் வாசகங்கள் எல்லாம் தன்னம்பிக்கையிலிருந்து தோன்றியவை ஆகும். முயன்றால் முடியாதது எதுவும் இல்லை என்ற அழுத்தமான சிந்தனைதான் தன்னம்பிக்கையின் அடித்தளம்.

**தன்னம்பிக்கை எங்கே தொடங்குகிறது?**

நம்பிக்கை எனும் வலைப்பின்னல் சூழவே மனிதன் வாழ்ந்து வருகிறான். தன்னம்பிக்கை என்பது ஒரு மனநிலை. இதனை எந்த வயதிலும் வளர்த்துக் கொள்ள முடியும். இது பெரியவர்களிடமும் இளைஞர்களிடமும் ஏன் குழந்தைகளிடமும் காணப்படுகிறது.

ஆம் தன்னம்பிக்கை மனோபாவம் குழந்தைப் பருவத்திலேயே தோன்றிவிடுகிறது.

**தன்னம்பிக்கையும் வளர்ச்சியும்**

ஒரு பசு மாடு கன்றை ஈன்றவுடன் பிறந்த கன்றுக்குட்டி தட்டுத்தடுமாறி எழுந்து நின்று நடக்கத் தொடங்குகிறது. ஆனால் மனிதன் மட்டும் பிறந்தவுடன் எழுந்து நடப்பதில்லை. குழந்தைப் பருவத்தில் நடப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொள்கிறான். உட்காரவும் தவழ்ந்த செல்லவும் கற்றுக் கொண்ட குழந்தை எழுந்து நிற்க முயற்சி செய்கிறது. பலமுறை எழுந்தும் விழுந்தும் பின்னர் உறுதியாக நிற்கவும் கற்றுக் கொள்கிறது.

**தாய் தரும் தன்னம்பிக்கை**

அந்த குழந்தை தனது முதலாவது காலடியை எடுத்து வைக்கும் போதே விழுந்து விடுவோம் என்ற பயவுணர்வை மீறித்தான் அடி எடுத்து வைக்கிறது. ஆகவே அடுத்த அடி எடுக்கும் படி ஊக்கம் கொடுப்பவள் தாய்.

தன் குழந்தையை ஓரடி ஈரடியாகக் காலடி எடுத்து வைக்கச் சொல்லி அக்குழந்தையின் உள்ளத்தில் உன்னால் முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியவள் தாய். குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சி பருவத்திலும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது தாய் ஊட்டி வளர்க்கும் தன்னம்பிக்கை என்பதில் சந்தேகம் இல்லை.

**ஆசிரியர் தரும் நம்பிக்கை**

பள்ளியில் ஆசிரியர்கள் மாணவர்களிடம் எடுத்துக் கூறுகின்ற நம்பிக்கை ஒளி மிகுந்த சொற்கள்,

மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

மாணவர்களிடம் காணப்படும் உடல் திறன், அறிவுத்திறன், ஆகியவற்றை உணரச் செய்து அவர்கள் எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் திறமைசாலிகளாய் விளங்குவதற்குப் பள்ளிப் பருவத்தில் தன்னம்பிக்கை டானிக்குகள் தருபவர்கள் ஆசிரியர்கள்.

**நண்பர்கள் ஊட்டும் தன்னம்பிக்கை**

வேலையின்மை, வறுமை, குடும்பச் சூழல் எனப் பல சூழ்நிலைகளில் துவண்டு போகும் இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கை தேவைப்படுகிறது. மனம் தளர்ந்து, சலிப்பு மிகுந்து கடைசியில் விரக்தியடைந்து தற்கொலைப் பாதையைத் தேடும் இளைஞர்களும் இருக்கிறார்கள்.

இத்தகைய இளைஞர்கள் சொந்த வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் செயலூக்கமாகப் பங்குபெற அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டம் அவசியம் ஆகும்.

இச்சமயத்தில் அவர்கள் தங்களுடைய சிறந்த நண்பர்களிடமிருந்தும் அவர்களின் மரியாதையைப் பெற்ற மூத்தவர்களிடமிருந்துதன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறார்கள்.

**இலக்கியம் தரும் தன்னம்பிக்கை**

நூல் பல கல் என்பதனைப் புரிந்து கொண்டவர்கள் வாழ்வியல் நூல்களை நல்ல வழிகாட்டிகளாகக் கொண்ட தன்னம்பிக்கை எனும் உரமேற்றிக் கொள்கிறார்கள்.

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை..

என்று கவியரசர் கண்ணதாசன் சுட்டிக் காட்டுவார். வாழ்க்கையை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில் இலக்கியம் சிறந்த பங்காற்றுகிறது.

**நிறைவு**

ஒருவர் தன் வலிமைக்கு ஏற்றதை அறிந்து அதில் உறுதியாக நின்று செயல்படும் போது அவரால் முடியாதது எதுவும் இருக்காது. இந்த மன உறுதியோடு எண்ணித் துணிந்த பின் முன்வைத்த காலைப் பின் வைக்காது நடைகொண்ட படை வேழமென அச்சமின்றி முன்னே செல்லச் செல்ல முன்னேற்றம் உங்கள் காலடியில்! சாதனைகள் உங்கள் கைப்பிடியில்! இந்த உலகில் தன்னம்பிக்கை என்னும் மனம் பதிந்து வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும்.

**கு.பவித்ரா**
**இளங்கலை முதலாமாண்டு**
**நுண்ணுயிரியல்**

## கற்பு

*அழகுடை அவளின்*
*மரண அரங்கேற்றம்*
*இனிதே நிறைவடைந்தது*
*தூக்குக் கயிற்றினில்..!*
*அவளின் ஆடையிலா உருவம்*
*அவன் கண்களில்*
*அரங்கேறியதால்..*
*காலந்தோறும்*
*யுவதிகளை அவதிக்குள்ளாக்கும்*
*கற்பே காரணம்..*
*கற்பை இழந்தாளாம்*
*சமூகம் சபித்தது..*
*கயிற்றில் ஏறினாள்*
*கற்பை இழந்ததால்..*
*சமூகத்தை விலக்கி*
*மரணத்தை இலக்காக்கிக் கொண்டாள்*
*கொன்ற சமூகத்தைச்*
*சபிக்கவும்*
*தண்டிக்கவும்*
*நீதி இல்லையே..?*
*கற்பை வெறும் உடலில்*
*புகுத்திப் புரளும்*
*இச்சமூகம் மனதில் மறைக்க*
*மறுக்கின்றன..*
*கருப்பெழுத்துக்குள்*
*கட்டுண்டிருக்கும் கற்பிற்குள்..*
*காவியப் பெண்களைக்*
*கணக்கெடுக்காதீர்கள்..*
*கற்பின் அகராதியை*
*அடியுடன் அழித்தே*
*அடிமுதல் ஆதிவரை*
*மனத்தினில் வைத்தே*
*பாரதியைப் பாடுவோம்*
*புதுமைப் பெண்களைப்*
*பார்த்த பின்..!*

**கோ.நந்தகோபால்**
**உயிர்த் தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## ஆர்மோனியமும் நெளிந்த தட்டுகளும்

*ஆர்மோனியம் வாசிக்கும் அவன்*
*இசையாளன் அல்ல..*
*கவிபாடும் அவன்*
*கவிஞனும் அல்ல..*
*வறண்ட தலை..*
*கிழிந்த கந்தல் ஆடை*
*கையில் நெளிந்த தட்டு*
*குறைவான சில்லறை*
*தட்டின் ஓரத்தில்..*
*போதாதென்று*
*குழந்தையின் அழுகுரல்..*
*அவன் பாடும் பொழுது*
*பசியை மறக்கிறான்..*
*குழந்தை அழும் பொழுது*
*இவ்வுலகை வெறுக்கிறான்.*
*வருவது வரட்டும் என்று*
*வாழ்க்கையை நகர்த்தும்*
*பரம பிச்சைக்காரர்கள்*
*இன்னும் வாழ்ந்து கொண்டுதான்*

*இருக்கிறார்கள்*
*மிக அருகில்..*
*நாம் தான் கேட்க மறுக்கின்றோம்*
*இசையின் இனிமையில்*
*ஒரு குழந்தையின்*
*அழுகுரலை..*

**பா.ஹரிஷ்குமார்**
**உயிர்த் தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## தலைமுறை

*பழைய ஆணி*
*பிறந்த குழந்தைக்குத்*
*தாய் தான் ஆணி*
*வளரும் இளைஞனுக்கு*
*எண்ணம் தான் ஆணி*
*வளரும் பெண்களுக்கு*
*குணம் தான் ஆணி*
*வயதான முதியோருக்கு*
*பிள்ளைகள் தான் ஆணி*
*வளரும் கட்சிக்கு*
*தொண்டர்கள் தான் ஆணி*
*வளர்ந்த கட்சிக்கு*
*குறிக்கோள் தான் ஆணி*
*ஆளுகின்ற கட்சிக்கு*
*தலைவன் தான் ஆணி*
*வளரும் நாட்டிற்கு*
*நல்லாட்சி தான் ஆணி*
*ஆணிகள் பல சமயம்*
*துருப்பிடித்துவிடுவதுண்டு..*
*பழைய ஆணிகளும்*
*புதிய ஆணிகளும்*
*தயாராக நிற்கின்றன..*
*பழைய ஆணிகள்*
*கலற வேண்டும்..*
*புதிய ஆணிகள்*
*கூரேற்றப்பட வேண்டும்..*
*அரசியல் உடலில்*
*புதிய இரத்தம்*
*பாய்ச்சப்பட வேண்டும்..*
*புதிய தலைமுறைகள்*
*புறப்படவேண்டும்..*

**டி.கார்த்திகேயன்**
**உயிர்த் தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## டீக்கடை குமாரு..

*அதிகாலை வேளையிலே*
*ஆள்நடமாட்டம்*
*ஆரம்பமாகையிலே*
*வெண்மதியை உருக்கிக்*
*காய்ச்சிப் பொங்கும்*
*அமுதப் பாலையும்..*
*கதிரவனின் கதிர்களைக்*
*கடைந்தெடுத்த*
*செந்நீர்ச் சாயத்தையும்*
*எண்ணுவதற்கு அரிய*
*கோடியான விண்மீனை*
*இனிப்பாகக் கலந்து*
*தித்திக்கும் சுவையுடன்*
*வெதுவெதுப்பாக*
*வெளுத்த அருவி ஒன்று கொட்டுது*
*இரண்டடி இடைவெளிக்குள்..*
*சத்தத்துடன் விழுகையில்*

சத்தம் கேட்டு
துயில் முறித்த
பக்கத்து வீடுகளின்
விடியற் சேவல்
கொக்கரக் go வென்று கூவுகயில்
குமார் வீட்டு சேவலும் கூவியது
கொக்கரக் come..

**டி.கோகுல்நாத்**
**உயிர்த் தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## பைலட்

எப்பொழுதும் பயணம்
ஆகாயத்தில் மட்டும்
தனியாக அல்ல..
கூட்டம் கூட்டமாக
நானே துவங்குவேன்
நானே முடிப்பேன்..
டிராபிக்கும் இல்லை
சிக்னலும் இல்லை
உலகத்தைச் சுற்றிக் காண்பிக்கும்
ஆகாய மனுசி நான்..
பெண் விமானியாய்
வலம் வரப் போகிறேன்..
தந்தைகொடுத்த உற்சாகம்
தாய் கொடுத்த பாராட்டு
நண்பர்கள் அளித்த ஊக்கம்
எல்லாம்
கைசேர்த்து தூக்கிவிட்டன
பெண் விமானியாய்..
இன்னும் செய்வேன்
ஏராளமான சாதனைகளை..
போராடி ஜெயிப்பேன்..
போராளியாய் வாழ்வேன்..
அப்போது என் கருவும் சொல்லும்
நானும் உன் கூட
வருகிறேன் என்று..

**ச.ஜெயசங்கரி**
**உயிர்த் தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## பிச்சைக்காரப் பெண்

கணிசமான காலை வேளை
கதிரவன் காட்சி உதயம்
எண்ணற்ற வாகனங்கள்
சிவப்பு ஒளியில்
மயங்கி நிற்க
மஞ்சள் ஆடை அணிந்த
மங்களகரமான
பெண் ஒருத்தி
மடி ஏந்திக்
கேட்டுக் கொண்டிருந்தாள்
கண் கலங்கி
நின்று கொண்டிருந்த அவளை
கண்டு கொள்ள ஆளில்லை..
என் நெஞ்சம்
புண்ணாகிப் போனது
நீ கையேந்திய வேளையிலே..
தாய்மைச் செல்வியே
தளராதே கவலைகள் மாறும்
உன் கைகளைத் துடைக்க
கரங்கள் ஓங்கும்..
உன் கண்ணீரின் கதையை
நான் அறியவில்லை..

*ஆனால் உன் வாழ்க்கையின்*
*வலியைப் புரிந்து கொண்டேன்..*
*உன்னை*
*ஆறுதல்படுத்த தெரியவில்லை..*
*அரவணைத்துக் கொள்கிறேன்..*

**ஆர்.ஐஸ்வர்யா**
**உயிர்த் தொழில் நுட்பவியல் அ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்

*சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் துணைத்தலைவர், இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர், ஆகச் சிறந்த தத்துவஞானி என்னும் மிக முக்கிய திறமைகளைக் கொண்டு விளங்கியவர் டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்கள். 05.09.1888 அன்று தமிழ்நாட்டில் உள்ள திருத்தணியில் பிறந்தவர். தனது துணிச்சலான பேச்சுரையால் பல அவசியமில்லாத திட்டங்களை எதிர்த்துப் போராடியவர். இந்தியாவின் முன்னேற்றத்திற்குப் பெரும்பாடு பட்டவர். பதினாறு வயதில் முறைப்படித் திருமணம் புரிந்து ஐந்து பெண் குழந்தைகளையும் ஒரு ஆண்மகனையும் பெற்றெடுத்தவர். குடும்பம், சமுதாயம், நாடு என்று தனது எண்ண ஓட்டங்களை விரிவுபடுத்திக் கொண்டதால் தான் ஆகச் சிறந்த அரசியல்வாதியாக தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் வலம் வர முடிந்தது.*

*இதனால்தான் 1962 – 1967 வரை குடியரசுத் தலைவர் பதவியை இவரால் அலங்கரிக்க முடிந்தது. இந்து மதத்தைத் தழுவியிருந்தாலும் மதச்சார்பற்ற ஜனநாயகத்தை வலியுறுத்தியே இவரது சிந்தனை செயல்பாடுகள் அமைந்திருந்தன. தெலுங்கினைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் தமிழ் மொழியை ஒருபோதும் விட்டுக் கொடுக்காதவர். இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்தவர். குடியரசுத் தலைவராக இருந்தபோதும் இந்தித் திணிப்பை எதிர்த்தவர். ஆசிரியர் பணியை தனது உயிருக்கு நிகராக நேசித்தவர். நல்ல சமுதாயத்தை அசிரியர்களால் மட்டுமே உருவாக்க முடியும் என்று தீர்க்கமாக நம்பியவர். இதனால் தான் இவரது பிறந்த (செப்படம்பர் 5) நாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாடுகிறோம். 1954 ஆம் ஆண்டு பாரத ரத்னா பெற்ற டாக்டர் அவர்கள் 17.04.1975 அன்று இயற்கை எய்தினார்.*

**மாணவர்கள் தங்களின் சுய படைப்புகளை மட்டும் விடியல் இதழுக்கு அளிக்கவும்**
**- ஆசிரியர்**